DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.219/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : சொக்கலிங்கம்
Father/ Husband Name : சேவுகபெருமாள்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 30.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கே.சிறுவனூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை தெரியும். 1 வது எதிரியின் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே அரசாங்கத்திலிருந்து வந்து பாலம் (தூம்பு) போட்டார்கள். ஆனால் நாங்கள் சொல்லிக் கொடுத்து பாலத்தை அவர்கள் பக்கம் தள்ளிப் போட்டதாக நினைத்துக் கொண்டு கடந்த 2021-ம் ஆண்டு ஒருநாள் அ.சா.1 100 நாட்கள் வேலைக்கு போயிட்டு வந்த போது இருஎதிரிகளும் என் மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி தள்ளிவிட்டுள்ளார்கள். நான் வீட்டிற்குள் இருந்தேன். வெளியே வந்து பார்த்த போது என் மனைவி கீழே விழுந்துகிடந்தார். கீழே விழுந்து கிடந்த என் மனைவி மீது 1ம் எதிரி வயிற்றில் மிதித்து விட்டார். பின்பு என் மனைவியை தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நானும் என் குடும்பமும் தேவகோட்டை ராம்நகரில் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல, ராம்நகரில் வீடு உள்ளது ஆனால் அந்த வீட்டில் வசிக்கவில்லை. மேற்படி வீட்டை வாடகைக்கு விட்டுள்ளோமா என்றால் இல்லை, வீட்டில் இன்னும் வேலையே முடியவில்லை. சம்பவம் எந்த தேதியில், எந்த மாதத்தில்

நடந்தது என்று ஞாபகமில்லை. சம்பவம் நடந்தன்று நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். சம்பவம் நடந்த 2 நாட்களுக்கு பிறகு புகார் கொடுத்தோம். புகாரை தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் கொடுத்தோம். என்னை போலீசார் காவல்நிலையத்திலும், ஊரிலும் விசாரித்தார்கள்.

2. என்னை தாலுகா காவல் நிலையத்தில் மட்டும்தான் விசாரித்தார்கள், ஊரில் வந்து ஊர்ஆட்களை தான் விசாரித்தார்கள். 100 நாட்கள் வேலை சென்று எத்தனை மணிக்கு திரும்ப வருவார்கள் என்றால் 1 மணிக்கு மேல் வருவார்கள். நான் ராம்நகரில் தான் வசிக்கிறேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக கிராமத்தில் வசிப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதுவரை ராம்நகர் வீட்டிற்குள் குடியேறவில்லை. என் மனைவியை எதிரிகள் தாக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே சந்து பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 219/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : காளிமுத்து
Father/ Husband Name : சுப்பையா
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 30.09.2025.

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கே.சிறுவனூாரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 3-4 ஆண்டுகளுக்கு முன்பு தேவகோட்டை தாலுகா போலீசார் கே.சிறுவனூாரில் வயக்காட்டிற்கு செல்லும் சாலை வழியாக வந்து கொண்டிருந்த போது போலீசார் அந்த இடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் அவர்கள் அங்கு வந்து விசாரித்தற்கு சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. போலீசார் என்னிடம் வெள்ளை தாளில்தான் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, அதில் ஏதோ எழுதியிருந்தது. அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.3 எனக்கு உறவினர் இல்லை, என் ஊர்க்காரர். அ.சா.3 எனது ஊர்க்காரர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,

நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.279/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : தவசிலிங்கம்
Father/ Husband Name : காளிமுத்து
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 29.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது நானாக்குடியில் குடியிருந்து ஹோட்டலில் வேலை பார்க்கிறேன். கடந்த 2020-ம் ஆண்டு மருதவயலில் உள்ள என் அக்கா அ.சா.1 வீட்டிற்கு சென்றிருந்தேன். மதியம் போலீசார் வந்து விசாரித்து படம் வரைந்து கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 எனது அக்கா என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,

நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.